உ

கடவுள்துணை.

காஞ்சாயபுசண்டை.

இஃது

—o*o—

கோகுலாபுரம்

அருணாசல முதலியாரால்

பார்வையிடப்பட்டு

கொண்ணூர்

மாணிக்கமுதலியார்

அவர்களால்

தமது

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

விக்ருதிவரு

உ

கடவுள் துணை.

கான்சாயபு சண்டை.

விருத்தம்.

சீர்வளர் மதுரைதன்னிற்சிறக்கவே செங்கோலோங்கிப்
பார்வளர முகம்மோன்றபாக்ஷாநபாபுமெச்சும்
கார்வளர் விரபுமுகக்கான்சாயபு கதையைப்பாடத்
தார்வளர் கூடல்மேவுந்தந்திபொற்பாதங்காப்பாம்.

தாம்தனதந்தநானா தன
தனனந்தன தந்த நாதந்தனானா

மகுடமுடிடால்விளங்க ஜன்னல்
மதயானைவளர்த்தெடுத்தவரிவேங்கைக்குட்டி
விகடமிடுவோர்கள்குலகாலன் வெற்றி
விசையாலீம்குலம்விளங்கவருதீரன்
ரதகஜதுரகபடையாளன் நல்ல
நடனமியிபெரினகுலவடிவிபுணகொடியான்
மதிவதுரைகானுகதைபாட எனக்கு
வரந்தரவேணுமடி மதுரைமீனாட்சி
கள்ளரைக்கருவறுத்ததீரன் நல்ல
கனமானமதுரைகாண்டிடுஞ்சூரன்
உறுக்கரிகொனுகதையடிக்க நாளும்
உலகங்களுக்கவேணும்சிக்கந்தர்சாயபு
படைவீரன்கானுகதைபாட சென
பாக்கியம்நீகொடுடிபாண்டியன்மகளே
கடல்சூழும்புவியெல்லாம்விளங்க மதுரைக்
கானுகதைதமிழினற்கூற வேண்டினேன்
பிறந்தனபின்னாபூருமண்ணு கானை
பிள்ளைப்போலேயெடுத்துவளர்த்தான்முசலாவி
சிறந்தவெள்ளைக்காரனிடத்தில் கானு
சிராய்மூன்றரைவருஷப்பிள்ளையாய்வளர்ந்தான்
அவனைமோசஞ்செய்யநினைத்தான் என்று
அப்போதேதூரத்திவிட்டான்முசலாவிவெள்ளைக்காரன்
அவனைவிட்டுக்கட்டுவெட்டுத்தெரிந்து கானன்
அன்பானபிரட்டனிடம்பிள்ளைபோய்ச்சேர்ந்தான்
பிரட்டனிடம்பிள்ளைபோய்வளர்ந்து நல்ல
புலிகுட்டிகான்சாயப்புபெரியவனுமானான்
பிரட்டுமொழிபாஷைகளும்படித்து நல்ல
வீரானமம்மூதலிநவாப்புதுரையிடத்தில்
தண்டுதிலேசேவகமாயிருந்து கானு
தைரியமாய்ச்சேவகஞ்செய்துவருநாளில்
மண்டலீன்ராயாமிகமகிழ்ந்து அப்போ

வழிச்சாரி ஆயத்தொழிற்கொடுத்தார்பாபு
வழிச்சாரிஆய்த்தொழிலெடுத்து நல்ல
மமூதலிசாய்ப்புக்குப்பணங்கட்டிவந்து
வழிச்சாரிசேவகத்தைவிட்டு கானை
லாங்கிறுண்சிப்பாயி ஆசேலிதன்னை
ஆம்தனிசிப்பாயி ஆகி அதில்
ஆரேழுமாதமாய்த்திரிந்துவருநாளில்
நீங்காயககருத்தியோகங்கொடுத்தார் கனங்
நிலையாகப்பதினேழுமாதமதிலிருந்து
நாய்க்கருத்தியோகத்தைவிட்டு கானன்
நலமாக அல்லிதாருவுத்தியோகமெடுத்து
டக்காகச்சிலகாலந்திரிந்து அப்போ
நிறமையாயதைவிட்டுசேமேதாருமானுன்
சமர்பெணுஞ்சமேதாராயிருந்து கானு
தனக்குநிறையிருநூற்றுச்சுபேதாருமானுன்
சுபேதாருத்தியோகமெடுத்து அப்போ
சுந்தரமாய்ச்சேவகஞ்செய்துவருநாளில்
தக்கோலம்பேராம்பூர்தனிலே யிருந்து
சந்தசாய்புபடேசாய்புவந்திறங்கிவிட்டான்
இக்கெலாம்வெகுகூச்சலாக அங்கே
சேனைகளெல்லாம்நெருங்கியிருக்கும்வேளையிலே
பசப்பாகபறங்கிமலைமேலே அப்போ
படைகூட்டிப்புதுச்சேரிவெள்ளைக்காரதுரைகள்
முசப்பாருடன்பறங்கிமலையிறங்க அந்த
மூதண்டபாபுகாதருங்கேட்டு
முசியார்சரங்கிவெள்ளைக்காரன் பெரிய
முசலாலிதுரைசன்னல்கேமலையழைத்து
முசியாப்பருமபெரியபிரட்டன் நல்ல
மூடிமன்னன்கீர்மேல்நெருப்பையுமழைத்து
சீரானதுரைசின்னபிரட்டன் இவர்களை
சீக்கிரமபாபுதுரைகூட்டிவரச்சொல்லி
ஆராமையனுப்புவோமென்று அப்போ
அதிவீரன்மமூதலிநபாபுதுரைகேட்டார்
சன்னல்துரைகம்சல்கூடப்பேசி அப்போ
தடமதனன்கான்சாயைவரவழைக்கச்சொல்லி
தன்னகரில்லாததுரைபிரட்டன் பார்த்துத்
தைரியமாய்க்கானுக்கேதுசொல்வானும்
வாடாநீகான்சாய்புதுரையே பறங்கி
மலைக்கோட்டைநாளெட்டில்பிடிப்பையேயானால்
நீடாகதிசைமதுரைதனக்கு உன்னை
நீசமாகக்கும்தாருய்வைக்கிறேனென்று
ஆன் [illegible]ரமுறுதியாய்ச்சொல்ல கானன்

அப்போதேகோட்டைவிட்டுவெளியிலேவந்து
கர்னல்பட்டாளம்பனிரண்டு
கல்கத்தாபட்டாளம்பிர்க்கட்டிரண்டு
ஐந்நூறுகுதிரைமுதல்நடத்தி
யாளிமுகபீரங்கியிருபதுநடத்தி
முன்னேதுமுடிமன்னர்நடக்க
முனைவீரன்பிரட்டனிடபட்டாளஞ்சூழ
துரிகொண்டுரிஜிமெண்டுநடக்க
சோல்தார்கருஞ்சட்டைக்கார்புடைசூழ
கொடிகொண்டபாளையமும்நடக்க
கோஷ்டமிட்டுமுல்தார்பானையஞ்சூழ
கெடிகொண்டுதம்பூரடிக்க
கெர்ச்சனையாயாறுபுள்ளங்குழலூத
முடிவேந்தன்கான்சாயபுதுரையும்
முழக்கியபாளயத்தைநடத்தினைப்போ
ஆர்க்காடுவீதியுந்தாண்டி
ஆடர்ந்தேறிவேலூர்விகலூருந்தாண்டி
நீர்க்கமுடனெல்லூர்தாண்டி
சேனைபரியறங்கிமலைக்கோட்டைவெளியில்
பறங்கிமலைகிழ்யாரிசத்தில்
பட்டாளமத்தனையுமணியாய்நிறுத்தி
இறங்கினையாருநாழிகைக்குள்ளே
யேற்றினான்மோர்ஜாவிலேமுபீரங்கி
கருமருந்துபோட்டுச்சேர்த்திடித்து
சனயானசஞ்சலிகணக்காகப்போட்டு
தருமிரும்புக்குண்டுவெடிகுண்டு
சட்டைபோட்டேயிடித்துத்தீர்த்திட்டான்பனித்தா
குமுறுந்தாரிடிகள்போலே
கொளித்தினன்பீரங்கிசொல்லக்கூடாது
சமர்முகத்திலக்கினியைப்போல
தான்பார்த்தவிடமெல்லாமோடுதேநெருங்கி
மழைமாரிபொழியிதேகுண்டு
மானங்குமுறுதேபீரங்கிவேட்டு
கனாசூழ்ந்தபறங்கிமலைக்கோட்டை
கல்லெல்லாந்தூளாய்பறக்குதேகண்டான்
கோட்டைதனில்முகப்பாருமேறிப்
கொத்தளந்தன்னிலேசத்தமூக்போலே
வேட்டாயீரம்பனித்தாதீர்த்தான்
மேலாடிக்காறுதுரைபாளயத்தைச்சாட
ஏரிட்டுத்துரைபாளயத்தைச்சாட
செப்படியுங்கோட்டைவிடியாமல்விடேனென்று
விதிட்டுக்குதிரைகள்கனைக்க

வேந்தனுங்கான்சாயபுதிர்த்திட்டான்பலித்தா
மன்னவரக்கண்டந்தசாயபு குண்டை
வாரியிறைத்தான்மழைமாரிபோலே
அண்டிமேஜனைகான்சாயபு குண்டு
அத்ராமல்லரக்கண்டுநெஞ்சம்பதைத்து
ஏழுபீரங்கிகலைவீழாய் நிறுத்தி
ஏராளமாய்ச்சல்லிவாரியதிற்போட்டு
முழுவியக்கினிமாரிபோலே வைத்து
முழக்கினான்குமருமெனபீரங்கிகெட்டு
மேலாடிபூரணமுடனளிக்க காறு
விழிசிவந்துசாரயப்பிப்பாயைத்திறந்து
காலாட்கள்சோர்ந்தார்படைக்கு அப்போ
கண்டபடிகொடுத்திட்டானெவ்வொருவிளாக
சிராயவெறிகொண்டுசனங்கள் மிக்க
தாங்காமல்நடவென்றுசாத்திருஞ்சிரம்பால்
பூராயமாய்ப்பட்டாணத்தைநடத்தி கானன்
புகழ்பறங்கிமலைக்கோட்டைமதிலோரம்வந்து
எனிமசெழுறுஅசாத்தி ஜனத்தை
யேற்றிபேபிரம்பாலேசாற்றினான்கானன்
அணியாபகைய்சிப்பாய்களோட முகபர்
அக்கினிபோல்கண்சிவந்துகொப்பறைதன்னில்
மூவாயிரந்துலாமீபக்காய்ச்சி அப்போ
முழுதெிருப்புக்காண்டியாய்சிப்பாய்கள்மேலே
காவலர்கள்வாரியிறைத்திட்டார் அதைக்
கண்டவுடன்சிப்பாய்கள்தலைகீழாய்விழுந்து
தெளித்தோடச்சோர்ந்தார்வினாத்து அகட்டி
நெருநென்றடங்கேரிக்கோட்டைமேற்கொண்டு
முழித்துபாராமற்கோட்டையின்மேல நின்று
மூன்றுபனித்தாதிர்த்தாஅணுகலையாக
சிறியகோட்டைக்குள்குதித்தா அப்போ
சிப்பாய்கள்பட்டாளம்பின்றொடர்ந்தேறி
ஏறியகோட்டைக்குட்குதித்து வந்து
எதிரிட்டமுசுபணாக்கைபிடியாய்ப்பிடித்து
முகமர்தனைப்பறங்கிமலைகோட்டை தன்னில்
முதல்வெட்டுபட்டயவால்வீசினபின்கானன்
வசுபாகத்தைதறுக்குவைத்து பாளையத்தை
விளாக்குப்போய்த்தக்கோலம்போரப்பூர்பிடித்து
நெல்லூர்சிராப்பள்ளியும்பிடித்து காறு
மீராசவூர்க்காலிவிதிகளில்வந்து
மல்லூறுஆற்கடிகோளில் பறைச்சி
மாசானைக்கண்ணுலைகண்டாலேகானன்
மாசானைக்கண்டுமேபலாத்து கல்ல

மகலதுரைகான்சாய்புஆல்விட்டுப்பேசி
மாசாலவநல்யாணஞ்செய்தான் அப்போ
மதுராபுரிகோட்டைக்குலக்குதடாயோகம்
இரும்பினான் ஆற்காடுவெளியில் கானன்
செயங்கொண்டுலாக்கண்டுசீரானதுரைமார்
விரும்பியேசந்தோஷமாகி துரைமார்
வீறானமதுரைக்குமதானென்றுசொன்னார்
அதிசேதியர்க்கருஞ்சொல்ல அப்போ
அதிவீரனம்முதலி-நபாபுதுரைசொல்வான்
சதுர்மகனேதுரைபெரியபிரட்டா நான்
தயவாகவொருசேதிசொல்லுகிறேன்கேளு
கும்தான்கலகமொருபக்கம் பிரட்டா
கூறுசாய்புகலகமோசொல்லக்கூடாது
வர்மமாய்மயலாடிக்கல்வர் பயமும்
மர்திமெய்யர்கலகமும்சொல்லப்போகாது
மறவர்குடிபொருந்தாத்தேசம் அந்த
மதுரைககனுப்பினால்மோசம்வருமென்றான்
இறவீரும்துரைபெரியபிரட்டன் நபாபு
தேவடியிலேயிருந்தேதுசொல்லலுற்றான்
பனிரண்டுவருஷங்களாச்சு அந்தப்
பாண்டியன்பதிசீமைதன்னரசுவிட்டு
இனிகமதுகானுதனையனுப்பி சீமை
யெல்லாமடக்கியொருகுடைக்கீழ்நிறுத்தி
வடக்கேவக்குபயணஞ்சேரும்படியாய் இவனை
மதுரைக்கனுப்பினால்வசமாகுமென்றான்
திட்டமாகமம்முதலிசாய்பு அப்போ
சிந்தைதனிலெண்ணியாலோசனைபண்ணி
புவனமெல்லாம்புகழ்பெரியபிரட்டா நல்ல
புலிகுட்டிநபாபுநான்சொல்லுகிறேன்கேளு
இவனைமதுரைக்கனுப்பினைவத்தால் நானே
யெதிராளியாவனேதிரிசிறுப்பள்ளிக்கு
கானனையனுப்பவேண்டாமென்றார் அப்போ
கர்னல்துரைபிரட்டன்நபாபைப்பார்த்து
கான்வளர்த்தபிள்ளையந்தக்கானன் சாய்பு
நம்மோடெதிர்த்தவன்சண்டைக்குவந்தால்
எண்ணியெட்டுநாளைக்குள்ளாக நெருப்பா
யெரித்துநான்மதுராபுரிபிடித்திடுவெனென்றான்
புண்ணியநபாபுதுரைப்பார்த்து பிரட்டாவுன்
புத்திக்குச்சரியானபடியென்றுசொல்லி
கானுதனைபக்கத்திலழைத்து நபாபு
கனகமாகததாம்பூலங்கையிற்கொடுத்து
நானும்உனையனுப்புகிறேன்தெற்கே எனக்கு

சண்டைசெய்யாதேயென்றார்பாபு
கானுமனதுமகிழ்வெய்து பிரட்டன்
கனபிரியமாகவேவியதுசொல்லுவானும்
காயிதங்கைதனிலேகொடுத்து சாயி
காரியங்கண்ணுகைப்பார்த்துச்சொல்லி
வேகமுடன்கடமதனைக்கென்று பிரட்டன்
விசவுறுதியாய்ச்சொல்லிஅரண்மனைபோய்ச்சேர்ந்தான்
சேர்ந்தவுடன்கானுதனைதானும் பிரட்டன்
திடவுறுதிச்சொன்னபின்வெளியேவந்து
மாசாவைக்காடிமின்மேலேற்றி சேனை
மருங்கில்நெருங்கிவரக்குதிரைமேலேறி
ஆசாரவாசல்வழிதாண்டி நல்ல
அழகானசென்னைபுரிகோட்டைவெளிதாண்டி
திருச்சிறுப்பள்ளிக்கோட்டைதாண்டி கானு
செயனுகைபகளம்விராலிமலைதாண்டி
வரிசையாய்மணப்பாறைகடந்து தோகை
மலைதாண்டிநம்மன்குரிச்சியிலிறங்கி
நம்மன்குரிச்சிப்பூச்சேனையழைத்து . கானு
ராஜாதியதியவனுக்கேதுசொல்வானும்
சமையாகவுனதுபெருமசேனை தன்னில்
கள்ளர்பயமேதடாகாவெழிதன்னில்
இராப்பகலாய்பாளையம்வருது இனிமேல்
இவ்விடந்தன்னில்களவுநடந்துதேயானால்
தப்பாகநீயிருக்குந்தேசம் எல்லா
தவிடுபொடியாக்கிரணதூளியாயடித்து
எவனெவனிருந்தாலும்பாரோன் உன்னை
ஏழுமலைக்கப்பாலேபிரட்டிடுவேனென்று
அவனைபயப்படுத்திவழிபதனம் என்று
அதட்டிவலுப்பேசிநடத்திட்டானப்போது
துவரங்குரிச்சியதுதாண்டி உயர்
கோசிக்குரிச்சியெனும்நத்தம்வந்துசேர்ந்து
நத்தத்துளிங்கனையழைத்து கானு
நலமானஒருசேதிதிடமாகச்சொல்வான்
கள்ளர்பயமிககாட்டில்மெத்த வென்று
கனமானநபாபுதனைசொன்னூரடாபாவி
எள்ளளவுபாதைவழிதனிலே லவுண்டி
இனிமேலுபாதையிலேகள்ளர்பயமானால்
எட்டுநாளையில்கச்சைக்கட்டி உன்னை
ஏலேலோதூக்கிலேபோட்டிடுவேன்கள்ளா
மட்டுள்ளவழிபாதையதனம் என்று
மன்னன்வருகிறான்திசைமதனைநோக்கி
கஅழகர்மலைக்கொம்பையுந்தாண்டி நல்ல

அழகானதேனூர்மைதானவெளிதாண்டி
தளம்பெரியநால்சேனை சூழ நல்ல
சவுர்யமுடனேநல்லகுலமதிலிறங்கி
கொடிமுரசுதம்பூரடிக்க நல்ல
கோட்டமிந்தனதுவகைபட்டாளஞ்சூழ
துடியாகவான்முகடதிர நல்ல
தோகைடர்கள்நடனமிடுவெண்கவரிவீச
கும்பினிமுரசுவெள்ளைக்காரர் தளமும்
கூட்டிமதுராபுரியில்லுயிலாகச்சேர்ந்தான்
இப்புவியெலாஞ்செவிடுபடவே பீரங்கி
இருபத்தொருவேட்டுதீர்த்தாநகர்தன்னில்
கோடைகாலத்திடிகள்போலே வைத்துக்
கொளுத்தினன்பீரங்கிசொல்லக்கூடாது
வாடைமலர்மதுரைநகர்தன்னில் வாழும்
மதிகூகுராயபவன்னரிட்டுப்பார்த்து
பேசிபிளநகர்போச்சுதென்று தளப்
பெருக்குடனேதிருச்சிறுப்பள்ளிகோட்டைசேர்ந்தான்
மதயானுதுரைகானுசாயபு கோட்டை
மதுராபுரியலங்கமீதுநின்றுபார்த்தான்
கதையானமதுராபுரிகோட்டை தன்னில்
சூரமும்வீரியமுஞ்சொல்லமுடியாது
தேங்காய்தண்ணீரலைமோதும் துய்ய
சிறுமல்லிப்பூசொரியுந்திசைமதுரைக்கோட்டை
மாங்காய்காய்த்துகுலையுதிருஞ்சோலை நல்ல
மங்கையர்கள்பந்தடிக்குமணிமதுரைவீதி
வெள்ளானைவிளையாடுமதுரை நல்ல
வெண்கதலிக்குநெருங்குமிகமதுரைகோட்டை
விள்ளமிர்தஞ்சொரியுந்திசைமதுரை நீண்ட
வீதிகளெல்லாங்கதம்பவாசமதுவீசும்
மந்தாரைமுல்லையிருவாட்சி செண்பக
மலர்சொரிந்துதேனொழுகுமணிமதுரைக்கோட்டை
நந்தாதிமணிமேடைவீதி நல்ல
நவமணிகள்குவித்திருக்கும்நல்மதுரைக்கோட்டை
வாழைகுலைசாய்ந்திடுமதுரை நகரில்
மந்திகள்பிலாக்கனியைமத்தளங்கொட்டும்
தாழைதனில்மயில்தோகையாடும் தென்டு

நம்மன் குரிச்சிப்பூச்சேயன் கண்டுசெந்திக்க
முத்தையன் முப்பன்வணங்க நாலு
முனைகொடுத்த தென்மலைவன்னியன்வணங்க
இணங்காதவுத்தமன்வணங்க இப்படி
ஏழுமை வருஷமிதிலிருந்தரசு ஆண்டேன்
வணங்கா தபேரெல்லாம்வணங்க அந்த
மறவருடதளகர்த்தன்வணங்கவரவில்லை
அடிக்கிறேன்மறவன்மேல்சாரி நாளை
பிடிக்கிறேன்திருப்பூவனக்கோட்டையென்றுசொல்லி
எழுத்தாணிகையிலேபிடித்து காணும்
இயல்பாகவக்கணையாயெழுதுகிறானப்போ
முடிமன்னுசேதுபதிதளவா நல்ல
மூளவீரதாமோதரபிள்ளையேகேளும்
அரோபாய்தாமோதரபிள்ளை உன்னுடைய
அசையாதபள்ளிமடைகொடியைவிடுபாவி
திருப்பூவனம்விட்டுவிடவேண்டும் உன்னுடைய
செல்வமுள்ளபாத்திஞர்விட்டுவிடவேண்டும்
திருப்பூவனம்விட்டுவிட்டாயானால் உன்னுடைய
சிவகங்கைமேல்கத்தியெடுக்கிறதேயில்லை
திருப்பூவனம்கொடுக்காமற்போனால் நல்ல
சிவகங்கைமேல்சாரீவரவேண்டாமென்று
வகைவிபாமாகவேயெழுதி அப்போ
பங்காருநாய்க்கன்வசமனுப்பிவிட்டான்
வருகிறான்பணலூருதாண்டி அந்த
வகையானதிருப்பூவனகோவலூர்தாண்டி
சிங்காரமாகவேநடந்து நல்ல
சிவகிரிபொன்னுங்குளமதுகடந்து
சிவகங்கைபேட்டைக்குநுழைந்து நல்ல
திரனெனுந்தாண்டவன்கையில்கொடுத்தான்
விருப்பமுடனெழுதியகாயிதத்தை பாதர்
விறல்பெருகுசிவகங்கைமறவர்தளகர்த்தன்
காயிதவக்கணையைப்பார்த்துக் கோபங்
—க ல்மீறித்திருப்பூவனக்கோட்டையில்வந்து
திண்டிறமாகமேற்சாய்ந்து நல்ல
தி மாகவேவேலையைச்சீராய்படித்து
தாண்டவராயபதளமந்திரி கோபங்

தான்மீறிமறுபிருபந்தானெழுதினனே
வேண்டாமடாதுரைகானுமுல்லே நானும்
வேளாளனொருவுறுதிசொல்லுகிறேன்கேளு
நெல்லூர்சிராப்பளியிலிருந்து நீயும்
நேர்தெற்கேமதுரைக்குவருகிறபோது
சொல்வார்கள்கும்தானென்று இப்போ
துடிவளருமதுரைக்குத்துரையானப்நீயும்
மச்சினனென்றுவுரவாடி உன்னுடைய
மாதாவைத்தங்கையென்றுவுரவாடியிருந்தேன்
மூச்சிருவுநிப்புநான்கொடுத்து உனக்கு
முதல்வரிசைமதுரைக்குக்கொடுத்தனுப்பிவிட்டேன்
மதுரையிலேயுனக்குமகன்பிறக்க என்னுடைய
மாணிக்கச்சிவகங்கைசர்க்கரைவணங்க
எதிராதேநெஞ்சந்துணிந்து கானு
என்னுடையதிருப்பூவணஞ்சேம்ப்பையோவென்று
எழுதியகாயிதந்தன்னில் அப்போ
இயல்பானசேவகர்கையில்கொடுத்தனுப்ப
துரைகான்சாய்புகையில்கொடுத்தார் அந்த
மதயானைகான்சாய்புவாசித்துப்பார்த்து
மதிமந்திரிதாண்டவராயா கானு
மதயானையொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
வேலூருவிசலூரிலிருந்து நானும்
வீருகமதுரைக்குவந்ததின்பிறகு
எனைக்கண்டுவணங்காதபேரை நீயா
யெரித்துநீர்த்தூளிப்படலமாய்நொறுக்கி
பனையூருமாங்காய்பிடிங்கி நானும்
யத்துநிலைவழிப்பாதைமடிமாங்காய்போற்றி
ஒருமாங்காயதிலேகுறைந்தாக்கால் பாதர்
ஒன்பதுகாய்வட்டிவாங்கினேன்சிங்கம்
தருவோம்குஞ்சிக்கந்தாமலையில் பாதை
தன்னில்வெகுதிரவியத்தைமுடிந்துநானெறிந்தேன்
எழுநாளப்படித்தானே அதிலே
ஈயெறும்புமொய்க்காமலிருந்ததடாடணமும்
நாளுமதிலேயறுதுகரையான் அதிலே
நலியாதுகருக்குருவிநாடாதுபணத்தில்
அப்படியடித்தேன்துரைகானு எனக்கு

ஆடாபணங்காட்டுமறவனெனதிரி
என்றுசொல்லிகான்சாயபுமேலன் நன்றாய்
எழுதியேகாயிதத்தைதிருப்பூவனமனுப்ப
வந்தொருகாயிதந்தன்னை நல்ல
வறிசைபெறுவேளாளன்பார்த்தேதுசொல்வான்
அடாயிப்படிசொன்னியேகானு நல்ல
தாகட்டுமொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
குடிக்கிறதுபணங்காட்டுக்கள்ளு மறவர்
எடுக்கிறதுஉடன்காட்டுமொக்குவளைதடிதான்
அடிக்கிறதுகரண்டக்கால்பார்த்து நாங்கள்
பிடிக்கிறதுகொண்டமயிர்தப்பாதுசொன்னேன்
நாங்களடித்துப்பறியாவிட்டால் எங்கள்
நலங்கொண்டகாடுமெட்டுமடித்துப்பறித்திடுவோமே
தாங்கியிக்குவருகதிலேயாதே உன்னை
க்ஷணத்திலேவீசிடுவேனென்றான்வேளாளன்
இன்னம்பலபலசேதிஎழுதி அவனும்
இயல்பாகவனுப்பினான்மதுரைநகருக்கு
வந்துதேமறவருடைதிருபம் கானும்
வாசித்துப்பார்த்துமவனேதுசொல்வானும்
இத்தனைவீரியங்கள்சொன்னால் பயலே
இனிமேலுங்கானுதுரைசொல்லுகிறேன்கேளு
வெத்திலைகொழுந்துகிள்ளுஞ்சாதி நீயும்
வேளாளவம்மிசம்முல்லைமணிமார்பா
மேழிபிடித்துழுஞ்சாதி பாரில்
விளங்கவேயெழுத்தாணிபிடித்தெழுதுஞ்சாதி
நாளுங்கொடிக்கால்பார்க்குஞ்சாதி நீங்கள்
நதிகுலமென்றேயிந்தராச்சியங்களறியும்
பட்டோலையெழுதுமுங்கள்சாதி உனக்குப்
படைவெட்டத்தெரியுமோதாண்டவராயா
இப்படிகான்சாய்பெழுதியனுப்ப அதற்கு
எதிர்திருபமெழுதுகிறான்தாண்டவராயன்
பட்டோலையெழுதுகிறதென்று நல்ல
பரிகுலதுரைகானுசொன்னேயேவுன்வாக்கால்
மாறுகாட்டோலையினுனன்னை இந்த
மாமரத்துக்கிளையில்தூக்காமல்விட்டால்
சந்த்ரகுலமுத்துவடுகையா உங்கள்

சாமியுடவாசல்பிரதானிநானல்ல
மீறுபுகல்வேளாளனல்ல சிங்கம்
விரித்ததுவுந்திவாசுக்கம்புளியுமல்ல
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல சிங்கம்
போட்டதுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல
விசையனெனுந்தாண்டவராயன் திருபம்
எழுதியேயனுப்பிவிடக்காணுதுணைதானும்
வந்தவொருகாயிதந்தன்னை நல்ல
வரிசைபெறுகான்சாயுபார்த்தேதுசொல்வான்
இந்தமொழிசொன்னியேயபயலே நானும்
இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
கர்த்தர்களமர்ந்திருக்குமேடை நல்ல
கருங்கல்லுச்சவுக்கைத்தனைப்பேர்த்துநான்பார்த்தேன்
பத்தாயந்தனிற்பணமுமிருந்து அதனில்
பதிவானபட்டயமுமெழுதியிருந்ததடா
இரட்டைவெங்கலக்கதவுநிலைதான் அதிலே
சேராய்கிடக்குதென்றுஎழுதியிருந்ததடா
இதம்பெறவேசேனைகளைக்கூட்டி அந்த
எழிலானவெங்கலக்கதவுநிலையெடுத்தேன்
கதவுநிலையாகவைத்தாண்ட ஆதி
கர்த்தாக்கள்முன்னதிலேபோட்டிருந்ததடா
தென்புறத்துவரிக்கல்லுமேலே கோடி
திரவியமிருக்குதென்றெழுதியிருந்ததடா
இதற்குவகையேதென்றுஎண்ணி நானும்
இயல்பாகமனதிலேயோசனைகள்செய்து
ஐம்பதுபேர்தச்சர்களையழைத்து நானும்
அனைக்ஷணத்திலாறுவரிக்கற்கீழிறக்கி
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே
திசைமதுரைக்கர்த்தர்களெழுதியிருந்ததைகேள்
பரமேஸ்பரிமீனாளுக்கெதிரே வாயிற்
படியில்வெகுதங்கப்பாளமிருக்குதென்றிருக்க
இப்போதுதிசைமதுரைமீனாள் தாயே
எனக்கிந்தத்திரவியத்தைக்கொடுக்கவேணுமென்றேன்
அப்போதுதிசைமதுரைமீனாள் எனக்கு
அறியவேயொருவயணஞ்சொன்னதைக்கேளு
மலைக்காதேதுரைகானேலா நானும்

வைத்திருக்குந்திரவியத்திலாசையாயிருந்தால்
தலைச்சன்பிள்ளைபெண்பிறந்தமங்கை அவளும்
தலைச்சன்பிள்ளையுண்டாயிருக்கவேணும்
பிராமணர்பெண்கொடுத்துவந்து என்க்குப்
பெலிவெட்டிப்பொங்கலிட்டுக்கொடுப்பையேயானால்
திரவியமிருக்கிறதைநீயும் காணு
திடமாகவெடுக்கவென்றுஉத்தரவுமாச்சு
ஆகட்டுமென்றுசொல்லிநானும் அப்போ
அன்பாகஆள்விட்டுவிசாரித்துப்பார்த் தன்
நாலுமுகம்ஆளவிட்டுப்பார்த்தேன் அப்போ
நலமுகொண்டசோழநகர்தன்னிலிருந்தான்
எழுநூறுபொன்கையில்கொடுத்து நானும்
எழுபேர்சிப்பாயிவிட்டுத்தள்ளிவரச்சொல்லி
நற்பெலிவாங்கிக்கோதேவி என்று
ராஜாதிகையினால்வெட்டினேன்காணு
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே
செப்புகல்லபட்டயமுமெழுதியிருந்ததடா
புட்பவனம்திருப்பூவனமும் உன்னுடைய
புகழானபள்ளிமடைமதுரையுடன்சேர்க்கை
தேவர்கள்பூசைபண்ணுங்கோட்டை என்னுடைய
திருமதுரைச்சேர்க்கையுந்திருப்பூவணக்கோட்டை
சிவகங்கைபட்டணமுநல்ல என்னுடைய
சீரானமதுரைக்குப்பண்ணக்கிராமம்
வயிடூரியந்தங்கம்விளையும் உன்னுடைய
மாணிக்கப்பாத்திபனார்மதுரையுடன்சேர்க்கை
திருச்சினாப்பள்ளிமடையெல்லாம் முன்னே
திருமலைக்கர்த்தாக்களாண்டிருந்ததேசம்
இப்படிவிபரமாயிருக்க நீயும்
வீணிலேதிரிந்தலைந்துபோகாதேவேண்டாம்
விட்டுவிடுதாண்டவராயா சும்மா
வீணிலேபழியேர்க்கப்போகாதுசொன்னேன்
எட்டுவருஷகாலமானாலும் நானும்
எதிராடித்திருப்பூவனம்வாங்குவேன்பாவி
என்றெழுதியர்க்காருகையில் காணு
இயல்பாயனுப்பினான்திருப்புபூவனம்நோக்கி
வந்ததொருகாயிதந்தன்னை முல்லை

வேளாளன்வாசித்துயோசனைகள்செய்து
என்னுடையராச்சியமென்றறிந்து நீயும்
இப்படிக்கெல்லாமெழுதினையேதுரையே
கனமானமகுடமுடிமன்று முல்லை
காரணமொருவார்த்தைசொல்லுகிறேன்கேளு
மைத்துனகான்சாய்புலே ஒரு
வார்த்தைசொன்காரணஞ்சொல்லுகிறேன்கேளு
மதுராபுரிபிறக்கையிலேகாணி எங்கள்
மகரபூவணலிங்கமதுகூடப்பிறந்ததடா
சதுர்மதுரைக்கோட்டையில்பிறக்கையிலே மறவர்
சமஸ்தானங்கூடப்பிறந்ததடாகானு
மதுராபுரிக்கோட்டைபிறக்கையிலே இதுவும்
மறவருடமண்ணிதென்பார்கேட்டுக்கொள்கானு
முடிக்கிருஞ்சம்பிரதாயம்வீணில் செம்பொன்
முடிமன்னன்திருப்பூவணக்கொடியுனக்குவருமோ
குடிக்குமேபூனையக்தப்பாலே அதனைக்
குடிக்கவென்றுநினைத்தாலும்வலதுகாலாலே
தட்டிக்கவிழ்த்திடுவேன்கானு உன்னுடைய
சம்பிரதாயங்களைநிறுத்திவிடுசொன்னேன்
மன்னனெனுந்தாண்டவராயன் எழுதி
மதுராபுரிதனக்கனுப்பிவிட்டானப்போ
வந்ததொருகாயிதந்தன்னை அந்த
வன்னலெனுங்கானுதுரைவார்த்தைசொல்வான்
அரேபிள்ளைதாண்டவராயா பாதர்
ஆண்பிள்ளைகான்சாய்புசொல்லுகிறேன்கேளு
கெட்டியாயிவ்வயணஞ்சொன்னாய் சிங்கம்
இரீடிகான்துரைகானுசொல்லுகிறேன்கேளு
சிங்கையுடன்முல்லைமணிமார்பா அந்தத்
திருப்பூவணங்கொடுப்பதில்லையென்றுயேபாவி
வந்துநிர்த்தூளியாயடித்து திருப்பூ
வணம்வாங்கிசிவகங்கைகம்பளிவிரித்து
கெடித்தலமெல்லாங்கொள்ளையடித்து உன்னுடைய
கெம்பீரபார்த்திபனார்தோரணங்கட்டி
அடித்துவுனைக்கைப்பிடியாய்ப்பிடித்து என்னுடைய
அங்காளம்மன்கொத்தளத்தில்காவல்வைக்கவிட்டாஸ்
வீராதிவீரனாகுரான் ஜனஸ்

வெள்ளைக்காரன்வளர்த்தெடுத்தபிள்ளையேகானும்
மூலானகான்சாய்புநீலன் தனது

மைத்துனன்தாண்டவராயனுக்கனுப்ப
வந்ததொருகாயிதந்தன்னை அந்த

மன்னனெனுவேளாளன்பார்த்தேதுசொல்லுவான்
போராடத்துணிந்தியேநீகானு நல்ல

புலிகுட்டியொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
திருப்பூவனங்கோட்டையையானுல் வடக்கே

திருச்சினாப்பள்ளிக்கோட்டைசேராய்நடந்து
மருப்பதப்பொன்வெளியிறங்கு நம்பிட

பாட்சாநபாபுதன்பேட்டிநான்செய்து
வாட்டுமேலாட்டையுமழைத்து நல்ல

நலமானநீரமேல்நெருப்பையுமழைத்து
வரட்டமுடன்றம்பிலியைக்கூட்டி கர்னல்

மரட்டியன்மேஜர்துரைஜன்னலையழைத்து
இள்ளப்பிரட்டனையுங்கூட்டி நல்ல

கேமல்துரைமுசியாப்பறங்கியையழைத்து
ஜென்னல்வெள்ளைக்காரனையுங்கூட்டி நல்ல

ஜெயம்பெற்றபிரட்டனையுங்கையோடேயழைத்து
மூப்பதுபட்டாளத்தைத்திரட்டி நல்ல

முடிவேந்தன்வண்டியூரில்கூடாரமடித்து
ஐப்பசிமாதத்திற்குள்ளாக உன்னை

அணியானபுளியமரச்சோலையில்தூக்காவிட்டால்
நாகுலசிங்கம்நானல்ல பெரிய

நாலுகோட்டைதளகர்த்தனானல்லகானும்
தேவர்புகழ்முத்துவடுகைய ராஜ

சிங்கம்மகிழுகிகாரிநானல்லவென்று
எழுதியேகான்சாய்புக்கனுப்பு நல்ல

இபலபானகான்சாய்புபார்த்தேதுசொல்வான்
வடக்கேநான்போறேனென்றுசொல்லி மெத்த

வலுவாகச்சொன்னியேநீதாண்டவராயா
டக்கையுமென்னுடையமனிதன் அதிலே

வரிசையுடனிழுக்கிலுன்துரைபெரியபிரட்டன்
பிரட்டனொருதலையிருக்குமட்டும் சிங்கம்

பிடிப்பாண்டாயெப்படியுந்திசைமதுரைக்கோட்டை
பிரட்டனொருதலைபிளந்துபோனல் நானே

பருந்தெடுத்தகுஞ்சல்லேபாபுசாய்பு
திருச்சிறுப்பள்ளிக்கோட்டைமுதலாய் அடித்தந்

திசைகம்பநாட்டியேதோரணங்கட்டிடுவேன்
துரைசிங்கசமர்த்தையறியென்று நல்ல

துடிவளரும்துரைகானுவாக்காலேசொல்லி
சொன்னதொருசேதிகளெயெல்லாம் கானு

துடியாகக்காயிதத்திலகண்டேயெழுதி
வரவிட்டான்கான்சாய்புநீலன் நல்ல

மங்கையர்வேள்தாண்டவன்மனதிலுட்கொண்டு
இன்னுமொருயோசனைகள்செய்து நல்ல

இதமுடனேவேளானனேதுசொல்வானும்
துங்ககுலதாண்டவராயன் நல்ல

கன்னிகைமாசாவின்மனதறியவெண்ணி
தங்கச்சிமாசாவேகேளு உனது

தன்கணவன்சேதிதனைக்கேழ்க்கிலேயோதங்காய்
திருப்பூவணங்கேழ்க்கிறுன்தங்காய் உன்னுடைய

செல்வமுள்ளபாத்திபனூர்கேழ்க்கிறுன்தங்காய்
திருப்பூவனம்விட்டுவிடுவேன் காலே

சிவகங்கைகுடியிருப்புநிலைக்கவொட்டான்கானன்
என்றெழுதிகாயிதத்தையனுப்ப நல்ல

இயலானமாசாவும்பார்த்தேதுசொல்வாள்
அண்ணேநீதாண்டவராயா தங்கச்சி

அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
சிங்கத்தின்குட்டிநீயண்ணே இதற்குச்

சிந்தைதனிலேநீங்கள்கவலைகொள்ளவேண்டாம்
தங்கையாய்நானிருக்கும்போது உந்தன்

தலைசீமைக்கொருநாளும்அழிவுவராது
சொல்லியும்கானுதுரைவந்தால் உனக்குத்

தோரணைச்சீட்டெழுதித்தருகிறேனென்று
மனம்போற்சிவந்திடும்வாயால் நல்ல

மைங்கொடியெழுதினதைதாண்டவராயன்
பார்த்துமனமகிழ்ச்சியாயிருந்து நல்ல

பண்பாகச்செங்கோல்செலுத்துவருநாளில்
மதுரைநகர்கான்சாய்புதுரையும் அப்போ

மண்டலிகள்யோசித்துயேதுசெய்வானும்
எழுமணிவேளையிலேகானு அப்போ

எழுந்திருந்துமாவினாண் மனைக்குள்வந்து
முழுமன்னன் துரைகானுசாய்பு கல்லு

மோகமிகுமாசாலையேதிட்டிப்பார்த்து
அதுபெண்ணே துரைமகளேமாசா கானன்

ஆண்பிள்ளையொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
மலையாளம்பார்த்துவரவேணும் பெண்ணே

மன்னருகோவிலும்பார்த்துவரவேணும்
இப்படிகானுதுரைசொல்ல மாசா

எதிட்டுப்பார்த்தவனுக்கேதுசொல்வாளாம்
மலையாளம்போய்பார்த்தபேர்கள் அங்கே

மாண்டவர்களல்லாமல்மீண்டவர்களில்லை
வேலிபெருத்ததுமதுரை கல்லை

வெள்ளாட்டிபெருத்ததும்தட்சணபூமி
வாசமுடனென்முகம்பாராமல் சாமி

மருமகம்மநாயிலேபார்த்தகாலத்தில்
மதுராபுரிக்கோட்டையுமாண்டு நீயும்

வயணமாய்செங்கோல்செலுத்தவுமாட்டாய்
ஊதிராடிவடக்கேபகைகளாதே கமது

ஈஸ்பரகபாபுதுரைசேதிதெரியாதே
கேற்கேபகைசெயாதேதுரைமகனே அந்த

விருதுபெற்றஜகொண்டூல்பொல்லாதவண்டன்
ஏற்கவேதெற்கேபகையாதே அதிலே

ஏழுவண்டிகைக்காரர்பொல்லாதபோக்கர்
இழக்கேபகையாதேதுரைமகனே அந்தக்

கீழ்க்காட்டுமரவருடசேதிதெரியாதோ
மழக்கமாயிருபேருமிருந்தால் நாளும்

படைமதுரைக்கொருநாளுமெதிரொருவரில்லை
என்துமாசாவும்புத்திசொல்ல கானு

இயல்பாகமறுத்துமனனேதுசொல்வானும்
இப்படிசொன்னியடிபெண்ணே கானு

இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
டப்பைப்பாளையக்காரர்வணங்க விருது

ராஜகேசரியென்றுராஜர்இளையளக்க
மூனெகொம்புபறக்கிமல்லிகோட்டை தன்னை

மூன்றுநாளைபபொழுதில்வாங்கினேனும்
பனங்காட்டுமறவனெனக்கெதிரோ நானே

பார்க்கிறேனவன்சமர்த்தைபாரடிபெண்ணே நாளும்
பனிரண்டுவருஷமாளுமை

பார்த்திபனார்த்திருப்பூவனம்பிடித்திடுவேனென்று அப்போ
குடிமக்குலகான்சாயபுசொல்ல

திலோர்த்தமையெனுமாசாயேது சொல்வாளாம் நீரும்
இனியொருவருமெதிரில்லையென்று

இப்படிசொல்லலாமோகான்சாயபுதுரையே முன்னே
இலங்காபுரிக்கோட்டையாண்டு

இருந்தானேஇராவணன்பத்துசிரசோடே அவன்
இலங்குமகாமேருகனையெடுத்தான்

அடியானவாழ்வெங்கேபோய்விட்டான்துரையே இலங்கைக்
கற்புடையசீதேவியினால்

காவலழிந்ததைக்கேட்கலையோதுரையே நம்மிட
அப்படியேமறவருடன்பகைத்தால்

ஆதீனங்கப்பாமலேபோமென்றுசொன்னேன் அதிலே
மறவனொன்றாலெப்பெரியவீட்டுக்காரன்

மறவனொன்றானுடன்பிறந்தபிறவிதானெனக்கு நாளும்
மறவர்மேற்படையெடுப்பையானால்

மங்கிலியங்களைந்துதன்மடியின்மேற்போட்டு நானே
மைந்தனையுங்கையோடேகூட்டி

மலையாளம்போய்விடியச்சேருவேனென்று நல்ல
மாசாருங்கோபமாய்ச்சொல்ல

மதுராபுரிகானுதுரையாண்மனைபோய்ச்சேர்ந்தான் மாசா
நடந்ததோர்சேதிகளைத்தான்

நலமாகவெழுதியேதாண்டவனுக்கனுப்ப அப்போ
வஞ்சியர்வேள்தாண்டவராயன்

மாசாவின்காயிதத்தைவாசித்துப்பார்த்து நல்ல
அந்நேரம்வரிசையுடுப்புகளை

அன்புள்ளமாசாவுக்கனுப்பவேணுமென்று நீல
மூன்னூறுவுடுப்பமணிசெய்து

முடிமன்னன்கைகொளுக்கபொன்னூலேசெய்து நல்ல
வெள்ளியாலுரிக்கயறுசெய்து

விலைமதியாவுரிக்கலையம்பொன்னூலேசெய்து நலமாய்
அன்னியதிலேசீனிச்சர்க்கரைபோட்டு

அடுக்கியிருப்பதுவுரியும்அழகாகச்சேர்த்து நல்ல
தங்கையவளிருந்துவிளையாட

தங்கத்தாலபள்ளாங்குழியொன்றுசெய்து
தங்கத்தாலபலகறைகள்செய்து நல்ல

தங்கத்தாலீர்க்கொல்லியொன றுலேசிப்பும்
மாசாவுக்குசினத்துாவிக்கை நல்ல

வச்சிரமணிமூக்குத்திபொன்னிஞற்செய்து
மாசாவின்மகனுக்கென்றுசொல்லி நல்ல

வயிடூரியக்குல்லாவில்வச்சிரக்கல்லழுத்தி
கானனுக்குமுத்தாலேஅங்கி வச்சிரக்

கல்லிழைத்தமோதிரமுங்கணகச்செய்து
மிளகுசம்பாநெல்லரிசிதனிலே நல்ல

மூவைந்துபதினேந்துபொதியனுபிடித்து
அழகுசிரகச்சம்பாநெல்லில் அப்போ

ஆறேழுமரக்காலையவவிடிக்கச்சொல்லி
சரியாகச்சர்க்கரைகலந்து நல்ல

தளமானயாழ்ப்பாணப்பட்டுமெடுத்து
இருநூறுபொன்பெற்றபட்டு ஒரு

இழையிழைக்குச்சரிகையினுற்குச்சுகள்கட்டி
பாற்பசுவுபாலாடுகடத்தி நல்ல

பண்வானசெங்கரும்புகட்டுயெனிரண்டு
சேல்போலும்விழிமாசாமகிழ மதுரை

திசைநேக்கியனுப்பினான்தாண்டவராயன்
வருகுதுமறவருடவரிசை என்று

மதுரைதுரைகான்சாய்புகாதிஞற்கேட்டு
தெருவீதிமேடைகடந்து கானு

திருமலைக்கர்த்தாக்கள்சாவடியுந்தாண்டி
சித்திரக்கூடமுந்தாண்டி கானு

தேவடிவிட்டரண்மனைச்சாவடியுந்தாண்டி
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை அந்தக்

கருங்கல்லுச்சளக்கையிலேயிலாகச்சாய்ந்து
நரசிம்மநாய்க்கனையழைத்து நல்ல

நரசப்பன்குருசப்பனைவரவழைக்கச்சொல்லி
திறமிகுகான்சாய்புமீலன் அந்த

சீனிச்சிராவ்முரசுவெள்ளைக்காரனையழைத்து
மட்டுடேசாய்பையுமழைத்து மல்லி

கார்க்கன்சேகரியைவரவழைக்கச்சொல்லி
அடமதனமுதுதழகுபிள்ளை மகது

சண்முகவேலாயுதமுதலியையுமழைத்து
தானப்பராய்க்கனையழைத்து நல்ல

தளவாயல்முதலிதனைவரவழைக்கச்சொல்லி
வாய்த்ததொருமீனாட்சியையன் தனையும்

வகையாகச்சீக்கிரங்கூட்டிவரச்சொல்லி
மனிரண்டுதுரைமாரைப்பார்த்து காணும்

படைமதுரைச்சாவடியில்சாய்ந்திருந்துகொண்டு
நாளை-மனிரண்டுமணிவேளைக்கெல்லாம் அந்த

பாங்கானதிருப்பூவனமேற்படைகள்பயணம்
நாளைக்குமறவன்மேல்சாரி என்று

நம்முடையசேனைகளுக்குறுதிசொல்லுமென்றான்
அந்த-வேளைதனில்மறவருடவரிசை அதனும்

வீருகவண்டியூர்செச்சையிலிறங்கி
தூதுவனைமுன்னாலேயனுப்ப அவனும்

துரிதமாயோடிவந்துமாசாவுக்குச்சொன்னான்
இதுசேதிமாசாவுங்கேட்டு பர

மேன்பரிமீனாட்சியையனைநிலைநினைத்து
சந்தோஷமாகியேமாசா அவனும்

தயாராகிபாப்பாசுகாலுக்கணிந்து
மகனையுங்கக்கத்திலிடுக்கி மாசா

வருகிறான்ராவணச்சாவடிகடந்து
சின்னக்கடையுங்கடந்து காணு

தேவடிவிட்டரண்மனைச்சாவடியுந்தாண்டி
சேர்ந்தகோபுரவாசல்தாண்டி அந்த

செகமகிழ்ந்திடும்வடக்குவாசலுந்தாண்டி
மடல்வாழைக்கனிசொரியுமதுரை அந்த

வையையாற்றுக்கரையில்வந்துநின்றுகொண்டு
உடுப்புவகைவரிசைகளையெல்லாம் மாசா

உத்தரஆற்றுவெளிகொண்டுவரச்சொன்னான்
வருகுதேமறவருடவரிசை அது

வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது
அதிசயத்தைக்கண்குளிரப்பார்த்து மாசா

அகமகிழ்ந்துமாணிக்கப்பெட்டியைத்திறந்து
மாசாவும்வரிசைகளையெடுத்து அப்போ

வகையுடனேகண்ணாலேயேறிட்டுப்பார்த்து
மாணிக்கப்பெட்டியைத்திறந்து அந்த

வச்சிரமணிகுல்லாவைமகன்தலையில்வரித்து
கானனுக்கனுப்பியமுத்தங்கி அதையும்
கனமாகவொருதட்டில்தானெடுத்துவைத்து
தங்கத்தின்தொட்டிலேயெடுத்து அதிலே
தன்மகனைச்சற்றுநேரம்போட்டாட்டிப்பார்த்தான்
தனக்குத்தந்தமுத்தாரவிக்கை எடுத்துத்
தான்பூட்டிக்கண்ணாலேகானழகுபார்த்தான்
செப்பரியமூன்றிற்குழாய்திறந்து மாசச்
சீனத்துப்பட்டெடுத்திதானுடுத்திக்கொண்டு
இப்படியுடுப்புகள்வந்ததற்கு இனி
என்னதான்சொல்லுவாளோபாதகன்கானு
என்மனதுபோலேயடிமீனாள் தாயே
இருக்கவேணுங்கானனுடமனதென்றுசொல்லி
நன்மைதரவேணுமடிமீனாள் கானன்
நல்லவாக்குசொல்லவேணுமீனாட்சியென்று
நடந்துவந்தாளப்போதுமாசு கானு
ராசாதிபதிமுன்னேவரும்வேளைதனிலே
கானகத்துப்புலிபோலச்சீறி கானன்
கண்சிவந்துபொறிபறக்கப்பார்த்தேதுசொல்வான்
ஏதடிபுதுச்சேரிபெண்ணே உனக்கு
இத்தனையுடுப்புகள்கொடுத்தவர்களாரு
கனகோபமாகவேகேட்டான் அப்போ
கன்னியவள்மாசாவுமேதுசொல்வாளாம்
ஆண்டவனேதுரைகானுசாய்பே எங்கள்
அண்ணன்தாண்டவராயன்கொடுத்தனுப்பிவைத்தான்
மாசாவுமிதுசேதிசொல்ல அப்போ
மதனதுரைகான்சாய்புயேதுசெய்யலுற்றான்
மகன்தலையிலிருந்தகுல்லாவை கானு
வாங்கிவரச்சொல்லிரண்டுசெல்லையுங்கழட்டி
உகந்தசராப்பையழைத்து இது
ஒருகல்லுவிலையென்னவெறுமென்றுகேட்டான்
அரண்மனைவிலையாகவிற்றால் ஒன்று
ஆறுநூறுபொன்னுக்குவாங்கலாங்கல்லை
இருகல்லுக்கூடிவிலையில்விற்றால் ஒவ்வொன்று
ஏழுநூறுபொன்னுக்குவிற்கலாமென்றான்
இப்படிகல்விலையுந்தேசம் அங்கே
இருக்குதேமறவகுடபுவனத்திலவுண்டி

இப்படிக்கல்லுபெருத்தா லவுண்டி
என்பேச்சைஎள்ளளவுங்கேழ்ப்பாரோ அவன்தான்
அடிக்கிறேன்மறவன்மேல்சாரி நாளை
பிடிக்கிறேன்திருப்பூவணக்கோட்டைதனையாதர்
முடிக்கிறேன்சம்பிரதாயம்லவுண்டி என்று
முழுநீலகாணுதுரை தமூவணையிற் சாய்ந்தான்
பொருப்புலவுந்துரைகாணுசாய்பே உந்தன்
புகழ்பெற்றமனையாட்டிசொல்லுகிறேன் கேளு
திருப்பூவணம்வேணுமென்றகேட்டால் நாணும்
ஸ்ரீதனம்போல்வாங்கித்தருகிறேனென்றான்
இப்படிமாசாவுஞ்சொல்ல அப்போ
இயல்பாகக்கான்சாய்புயேதுசொல்வாளும்
பெண்சாதிமாணியந்தனிலே லவுண்டி
புகழ்பெற்றதுரைகாணு ஆள்வேறுதேசம்
நாளைக்கேயொருபலித்தாதிர்த்து நாணும்
வாங்குவேன்திருப்பூவணக்கோட்டைநான்சிங்கம்
மண்டியேவொருபலித்தாதிர்த்து நாளை
வாங்குவேன்மறவருடபாத்திபனூரென்றான்
நாலானகாணுதுரைசொல்ல நல்ல
மங்கையர்சிகாமணிசாவுக்கப்போ
கோபங்கள்சொல்லமுடியாது மர்சா
குவளைவிழிசிவப்பேரிச்சமைதனிலேநின்று
இராவணனாய்நீவந்துபிறந்தாய் அதற்கு
இராமசாமியாகப்பிறந்திட்டான்மறவன்
சூரனாய்நீவந்துபிறந்தாய் சிவ
சுப்பிரமணியராகப்பிறந்திட்டான்மறவன்
கோரமிகுகஞ்சனாய்ப்பிறந்தாய் அவனைக்
கொன்றதோர்கிருஷ்ணனாய்ப்பிறந்திட்டான்மறவன்
துரியோதனனாய்ப்பிறந்தான் குரு
தேசிகன்தர்மனைப்போல்பிறந்திட்டான்மறவன்
அரியகீசகன்போலப்பிறந்தாய் அதற்கு
அதிவீரன்வீமனைப்போல்பிறந்திட்டான்மறவன்
திறல்விஜயன்போல்மறவன்பிறந்தான் அதற்குத்
தேத்தரசன்போல்பிறந்தாய்திசைமதுரைக்கார்க்க
ஆரோடேபகைத்தாலுமுனக்கு துரையே
அவர்களாலொருநாளுந்தாழ்வுவராது

மறவருடன்பகைத்தகாலத்தில் இந்த
மதுராபுரிமன்னனுக்குத்தக்காதுசொன்னேன்
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் மறவன்
மந்திரிவெள்ளாழன்வெகுதந்திரக்காரன்
வெள்ளியாய்முளைத்தாலுமுளைப்பான் அவனும்
வேந்தனாய்முளைத்தாலுமுளைப்பான்வேளாளன்
வெள்ளியெதிராகப்போனாலும் அந்த
வெள்ளாழனோடுமட்டுமெதிர்க்காதேவேண்டாம்
காராளனுக்கருமைதெரியாது நமது
கருணையனுத்திவான்தண்டவராயன்
மாசாவுமிப்படிசொல்ல கானு
மன்னவனுங்கண்சிவந்துதேதுசொல்வானும்
அங்கப்பூதத்தெரியுமடிலவுண்டி உனக்கு
ஆஸ்தானசங்கதிகள்தெரியுமோபெண்ணே
சோறாக்கத்தெரியுமடிபெண்ணே உனக்கு
துரைகளுடசம்பிரதாயம்தெரியுமோலவுண்டி
கஞ்சுகாச்சத்தெரியுமடிபெண்ணே உனக்குக்
காவலர்கள்கெடித்தலங்கள்தெரியுமோலவுண்டி
மிஞ்சிப்பேசுவதேதுலவுண்டி இத்தனை
வீரியங்களோதடிபுதுச்சேரிப்பெண்ணே
உருவியேதங்கபலாவை கோபித்து
உனைவிட்டுமாசாமேலெறிந்திட்டானப்போ
இருபதுபொன்சகலாத்துமருந்து கல்ல
இளந்திடையில்மாசாவுக்குக்காயங்களாச்சு
முகநேரேபேசமுடியாது என்று
முகந்திருப்பிமாசாவும்வெளியிலேவந்து
அருமாலைகிரிதனிலேநின்று மனதி
லன்பாகமாசாவும்யோசனைகள்செய்து
துரோகியினன்மையெல்லாமறிந்தோம் மதுரை
தேவியினன்மையினியறியவேணுமென்று
வராகிசெகசோதிகௌமாரி மதுரை
மகமாயிசன்னிதிக்குவந்தனைகள்செய்து
எண்ணூறுபொன்னெடுத்துக்கொடுத்து மதுரை
ஈஸ்பரிமீனாட்சிக்குச்சிறப்புசெய்யச்சொல்லி
மூன்னூறுகுடந்தண்ணீர்கொண்டு வந்து
முழுகியேமாசாவும்பட்டுடையுடுத்தி

மைந்தாரைமுல்லையிருவாட்சி நல்ல
மகிழ்பூசெவ்வலரிமாலைகளணிந்து
நந்தாதகுடமல்லிதரித்து நல்ல்
நனிமிகுபுனுகுசவ்வாதுகளணிந்து
சதுசாகக்கோபுரங்கடந்து மீனாட்சி
சந்நிதியில்மங்கையர்கள்தான்சூழவந்து
திருமலைக்கர்த்தாக்கள்நாட்டில் ஆயி
தேவியாய்வந்தவளேபாண்டியன்மகளே
சாதியிலேநான்புலைச்சிதாயே உந்தன்
சந்நிதிக்கொதிரகவருகிறேனடியாள்
மாதின்னும்புலைச்சிநான்வரேன் என்று
மனதிலேயெள்ளளவுங்கவலைவைக்கவேண்டாம்
கொஞ்சமாய்மனதிலேநினைத்து ஆயி
கோபித்துக்கொள்ளாதபாண்டியன்மகளே
வஞ்சகமனதில்நினையாதே பெற்ற
மாதாவுந்நீயுந்தான்மதலைநானடியாள்
துரைகானுயங்கிலேநீயிருந்தால் எனக்குயு
துடியாகவலதுபுரஞ்சொல்லவேணுந்தாயே
இரவிகுலமறவர்பங்கிலிருந்தால் எனக்கு
இடதுபுரஞ்சொல்லென்றுகேட்டாளேமாசா
தென்புறத்தில்சொல்லாதபடிக்கு மீனாள்
திருவிருப்பில்இடதுபக்கங்கெவுளியதுசொல்ல
என்மனதுபோலயடிமீனாள் தாயே
இருந்துதேஉன்மனதுபாண்டியன்மகளே
என்றுசொல்லித்திரும்பியேமாசா தனது
எழிலானமாளிகைமினுள்வந்துசேர்ந்து
விரும்பில்வருமர்க்காரமுத்தை அழைத்து
மிக்கதளகர்த்தனுக்குவிரைந்தெழுதலுற்றாள்
ஆடுமாடுதனமடாஅண்ணே உனது
ஆண்டவன்துரைமகன்பத்திரஞ்சொன்னேன்
மாடுதின்னும்புலைச்சிநானண்ணே என்னை
பார்க்கமாயுறவென்றுநம்பினையேஅண்ணே
சொல்லாதசேதியெல்லாஞ்சொன்னேன் அந்தத்
துரைமருதநாயகனுக்குவிசுவாசமில்லை
பொல்லாதமுழுமூடன்கானன் நாளும்
புத்திசொன்னால்கேழ்ப்பானோகேழ்க்கவேமாட்டான்

காணசெயித்திட்டாலண்ணே உனக்கு
கலக்கங்கெளொன்றுமில்லேமுல்லேமணிமார்பா
குறிப்பாகவெள்ளம்வருமுன்னே அணை
கோலிக்கொள்வடக்குசென்றநபாபீடத்திற்சொல்லு
ணனேநம்பிநீயிருக்கவேண்டாம் உனக்
கியன்றபடியார்முல்லேதாண்டவராயா
பணதுரம்மியமாகவெழுதி மடித்து
மாரியர்க்கார்கையில்கொடுத்தனுப்பிவைத்தான்
மாரியெனும்மர்க்காரும்வாங்கிக் கொண்டு
மணலூருதாண்டியேதிருப்பூவனஞ்சேர்ந்து
மண்டலீகன்கொலுவுக்குமுன்னே வைத்து
வகையாகச்சேதிசொல்லிக்கும்பிட்டுநின்றான்
மாசாவின்காயிதத்தைப்பார்த்து அந்த
மந்திரிதாண்டவராயன்சந்தோஷப்பட்டு
மருமகனேகைலாசம்பிள்ளை தம்பீ
மாசாவின்காயிதத்தைவாசியென்றுசொன்னான்
மருமகனுங்காயிதத்தைவாங்கி அப்போ
வாசித்தத்தளகர்த்தன்காதாரக்கேட்டு
சிங்கமெயர்க்காரமாரி ஒரு
சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளும்
தங்கச்சியென்றல்லோயிருந்தேன் எனக்குச்
சத்ராதியானுளேதிசைமதுரைமாசா
மைத்துனன்என்றல்லோயிருந்தேன் எனக்கு
மாத்தானுய்வந்தானேமதுரைதிசைகாரன்
அற்சனனுரவுபகையாச்சே என்று
சொல்லுபோமாசாவுக்குள்ளபடிமாரி
இனிமேலுந்திருப்பூவனமிருந்தால் நம்மை
இருக்கொட்டான்வடக்கேதானடக்கவேணுமென்று
தனிவீரதாண்டவராயன் அந்த
க்ஷணத்திலேபயணமென்றுதன்சேனைக்குரைத்து
மாப்பிள்ளைசுப்ரமண்யதேவா ஒரு
வார்த்தைநான்வேளாளன்சொல்லுவேன்கேளு
தப்பாமல்திருப்பூவனந்தனிலே நீங்கள்
தயாராயிருக்கவேணுங்காணுதுரைவருவான்
ஆர்க்காடுநான்போறேன்தம்பி ஆறு
மாசாமோஆறுவருஷமோதெரியாது

மார்க்கமாநான்வருமட்டும் நமது
    மரவர்திருப்பூவனம்பத்திரமென்று
உறுதிகளும்வெகுவாகச்சொல்லி அந்த
    உத்தமனுக்குதிரைமேல்சேணிவைத்தேறி
நடந்திட்டான்தாண்டவராயன் அந்த
    வாழியிற்சிலகங்கைப்பேட்டைவந்துசேர்ந்து
தடம்பரவும்பொன்மலர்செய்து நல்ல
    தங்கமலர்வெள்ளிமலர்தன்கையிலெடுத்து
விருதாணபேரிகைமுழங்க குதிரை
    மேலிட்டநகபத்துடங்காமுழங்க
இருபுறமும்வெண்கவரிவீச நல்ல
    எதிரிட்டிவெடிக்காரர்முன்னேநடக்க
கத்திகேடையக்காரர்சூழ குதிரை
    காரர்படைவீரடனேகடல்போல்நடக்க
வெற்றிவெண்சாமரைகள்வீச முல்லை
    வேளாளன்புறப்பான்சொல்லமுடியாது
மிக்கான்சிரங்காலுக்கழித்து நல்ல
    வீறுணநால்கோட்டைசோழபுரந்தாண்டி
ஒக்கூறுமைதானந்தாண்டி நல்ல
    உத்தாருந்தகுபட்டி ஒப்பமுந்தாண்டி
அரளிக்கோட்டையாசாரந்தாண்டி அந்த
    ஆஸ்தானந்திருக்கோட்டியர்மைதானந்தாண்டி
திறல்விஜயன்தாண்டவராயன் அப்போ
    சீக்கிரம்வயிரவன்பட்டிபோய்ச்சேர்ந்து
சலுகைசப்பெரியயுடையானின்ற நல்ல
    சுவர்னகாமிமகன்முத்துவடுகையன்
சந்திப்புகொடுக்கவேணுமென்று துரைக்குத்
    தயாராகப்பூப்பந்தல்போட்டிடச்சொல்லி
மஞ்சுதவழ்கனிவாழைநாட்டிக் நல்ல
    மகாதோரணங்கட்டிமாங்கனிகள் தூக்கி
அஞ்சடுக்குபஞ்சுமெத்தைவிரித்து அதிலே
    ஜங்கலமல்லிகைபூகாம்பரிந்துகொட்டி
பச்சைதிண்டுதலையணைகள்வைத்து அதிலே
    பாங்காளதிண்டொன்றுகொண்டுவந்துசாத்தி
இச்சைபெறசல்லாவைவிரித்து நல்ல
    இதமாகமலர்ப்பரப்பன்னீர்தெளித்து

வண்மையுடன்சோதித்துவைத்து ஐ௩
மண்டலேஸ்வரன் துருவன்முத்துவடுகையன்
கண்வளர்விபூதிதனைப்பூசி நல்ல
கஸ்தூரிபொட்டுஞ்சவ்வாதுந்தரித்து
ஒருபிடி பூணூல் துலங்க நல்ல
உத்திராட்சப்பொன்குவளையுஞ்சலிட்டாட
மருமுத்துதாழ்வடந்துலங்க நல்ல
வயிரவயிடூரியக்கல்மாலை துலங்க
முருகுவச்சிரகண்டி துலங்கக் காதில்
மோடியுடன்மரகதக்கல்கடுக்கனுமிலங்க
இருகையிலுந்தங்கவளையிலங்க சிரசில்
ஈரைந்துமுத்துகொண்டைப்பாகையுந்துலங்க
பூவாலேபூப்பந்தல்போட்டு நல்ல
பூலோகதேவேந்திரன்வெளியில்வருகையிலே
வடக்குவடகிடுகிடென்ட்டிர நல்ல
வாங்காவலம்பரிச்சங்குநின்றூத
இடிபோலபேரிகைமுழங்க நல்ல
இசையானசங்கீதமேளந்துலங்க
இடமுடையகுலபாராக்கு உலகில்
தேவதேவேந்திராதிராபாராக்கு
வடகரைப்புலிபெரியவுடையார் தேவர்
வங்கிஷம்விளங்கவருமாலேபாராக்கு
இப்படிகட்டியங்கூற பூலோக
இந்திரனாதிபதிகொலுவிற்றுசேர்ந்து
கெற்புலிமுத்துவடுகையர் பாதர்
கிரீடிகொலுசேர்ந்தவுடன்தாண்டவராயன்
திருப்பாலகனாதனக்குவந்து வெள்ளி
செம்பூதனில்சுத்தசலமதைகொண்டுகொண்டு
திருப்பரங்கனாயதுகடந்து துரை
தேவேந்திரனகொலுவில்சென்றுதளகர்த்தன்
ஒருபிடிவராகமொருதட்டில் கொட்டி
உத்தமன்தளகர்த்தனிருகையாலேந்தி
துருவனிகொனத்திஷ்டிசுத்தி ஆனைக்
சுழற்றியெறிந்துமுல்லைதாண்டவராயன்
வேதமொருமறையோர்கள் தானையை
வேளாளன்மூன்றுதாஞ்சுற்றிவந்துநின்று

பாதமதில்பன்னீர்சொரிந்து பின்
பட்டினூலீரமதுதானேதுடைத்து
தங்கமலர்வெள்ளிமலரொடுத்து துரை
சாமியுடபாதத்தில்தானுஞ்சொரிந்து
செங்கைகுவித்தேமுல்லைமார்பன் நல்ல
ஜெயமண்டலேஸ்வரன்திருவடிதனிலே
முடிசாய்த்துத்தாண்டவராயன் துரை
முத்துவடுகையாதுபாதத்தில்வீழ்ந்தான்
திடீரென்றுயிருகையால்தாங்கி துரை
சீர்பெறவாசீர்வதித்தெழுந்திரென்றுசொல்லி
மோதிரக்கையினாலேதாங்கி அண்ணே
முடிமன்னுகாராளாசொல்லுகிறேன்கேளு
வயதுக்குமூத்தவனீயண்ணே என்னை
வணக்கமாய்க்கும்பிடுதல்ஞாயமல்லசொன்னேன்
ஆதிக்கநிலைநிறுத்திவைத்தாய் அண்ணே
ஆஸ்தானம்நிலைநிறுத்திவைத்தவன்நீதான்
என்னசங்கதிகொண்டுவந்தாய் அண்ணே
எந்தனுக்குஞ்சொல்லென்றுகேட்டானேதுரையும்
ஆண்டவனேமுத்துவடுகையா உனது
அடிமைநான்காராளன்சொல்லுகிறேன்கேளு
உனக்காணவந்தவகைசாமி சாமி
உள்ளபடிவேளாளன்சொல்லுகிறேன்கேளு
திருச்சிறுப்பள்ளிக்கோட்டைதனிலே யிருந்து
திசைமதுரைக்கோட்டைக்குவந்தானேகானன்
நெல்லூர்சிராப்பளியிலிருந்து கானன்
நேற்றெற்கேவடமதுரைக்கோட்டைவருகையிலே
வரும்போதுகூம்தானென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்புகானுதுரையானுன்
(அவனே)மைத்துனனென்றுவுரவாடி அவன்
மாசாபுலைச்சியைத்தங்கையென்றெண்ணி
உடுப்புகள்வெகுவாகக்கொடுத்தேன் அந்த
உலோபியாங்கானனுக்குவிசுவாசமில்லை
கட்டாதவுலுப்பைக்கட்டியனுப்ப துரையே
கானனுக்கெவ்வளவுவிசுவாசமில்லை
திருப்பூவனங்கேட்கிறான்சாமி நம்முட்
செல்வமுள்ளமாத்திபனூர்கேழ்க்கிறான்சாமி

திருப்பூவனம்விட்டுவிட்டிடுவேன் நானே
சிவகங்கைகுடியிருப்புகிலேக்கோட்டன்கானன்
இப்படிதாண்டவராயன்சொல்ல நல்ல
இயல்பாகமூத்துவடுகையருஞ்சொல்வார்
வேணுமென்றுகானுகுரைகேட்டால் அண்ணே
வீணியிலேசனியத்தைவிழுக்காதேவேண்டாம்
நாலுகோட்டைச்சோழபுரம்போலும் அந்த
நலங்கொண்டபார்த்திபனார்வீட்டுவிடுமென்றார்
மேலுமவனுடனேபகையாதே சண்டை
மேற்கொண்டுமவனுடனேயெதிர்க்கமுடியாது
எந்தந்தசேனைகேட்டாலும் அவனுக்
கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம்
மாபோஜன்மதுரையுடன்சேர்க்கை திருப்பூ
வனக்கோட்டைவிட்டுவிடுமதிமந்த்ரியென்றார்
இப்படிதுரைமகனுஞ்சொல்ல நல்ல
இயல்பாகவேவாளனேதுசொல்வானும்
போபோபேய்கொண்டதுரையே உமது
புத்தியுமிம்மட்டோமூத்துவடுகையா
சண்டவிரலிடங்கொடுப்பேனே பாதர்
துரைவாசம்மதிமந்த்ரியதிகாரியடியேன்
கண்டறியுமுனதடிமைசேதி என்று
காராளன்சொன்னமொழிகாதாரக்கேட்டு
இப்படிதயிரியங்கள்சொன்னாய் அண்ணே
எப்படியவனைநீசெயங்கொள்வையென்றார்
அப்போதுமுல்லைமணிமார்பன் சிங்கம்
ஆண்டவன்முகம்நோக்கியேதுசொல்வானும்
ஆர்க்காடுநானுமிப்போநடந்து நல்ல
அனைவர்புகழ்நபாபுதனைகண்டுசந்தித்து
தாக்காவேபடைதிரட்டி அந்த
சற்சனன்துரைபெரியபிரட்டனையுங்கூட்டி
யேவலர்கிரீடிமுசலாலி கானன்
மேஜர்துரைமுசலியாசக்கிசையுமழைத்து
ஆவணிமாதத்திற்குள்ளாக அவனை
யனேவேருமறியவேதூக்காமல்விட்டால்
என்பேருகாண்டவனல்ல சிங்கம்
எகித்ததுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல
பிடிததுவுமெழுத்தாணியல்ல பாதர்
போட்டதுவுந்திவாசுகம்பளியுமல்ல
நன்னகர்சிறந்தபுவிபோற்றும் நல்ல
ராலுகோட்டைதளகர்த்தனுனல்லவென்றான்

எங்கவேவிரிபஞ்சொன்ருய் அண்ணே
இதற்குநான்மறுவசனஞ்சொல்லுகிறேன்கேளு
ஆர்க்காடுபோகிறது அண்ணே எனக்கு
அன்பாகத்தோற்றவில்லைதாண்டவராயா
துலுக்கனைநம்பலாமோ அண்ணே அந்த
துரோகிபறங்கிகளைநம்பவுங்கூடாது
மேலுக்காறுவரைக்குமிருந்தாம் சும்மா
விருதாவிலேவடக்கேபோகிருயண்ணே
கொள்ளுதான்பெருத்திருக்குந்தேசம் அதிலே
குடிகேடுமெத்தவுண்டுதிருச்சிறுப்பளியில்
ஏழுமாவருஷத்துப்பருத்தி நாளும்
எள்ளளவும்படைக்குமுகங்கொடுத்தனுப்பவில்லை
போனகாழியிலேபாபு உன்னைப்
பிடித்தல்லோபாராவில்போடுவேனென்ருர்
மானுயாவாழுத்துவதிகையர் உனது
மதியந்திரிபிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
சாலாவேழுடவதுறுமுத்து அதனைக்
கையிலெழிழ்த்தால்யாலவன்தானபாபு
மாலானமம்முதலிசாய்பை பொன்
மலைவெளியிலிழுத்துவந்துபேட்டியுஞ்செய்து
அவனிடத்தில்வெகுமதியும்வாங்கி சாமி
அவன்செவியைநானபிடிததாட்டுவேனென்ருன்
கவனமுடன்முல்லைமணிமார்பா வடக்கே
கனமுடனேபோய்வரயோசிக்கிருயண்ணே
ஆர்க்காடுபோனவர்களண்ணே கொழுத்த
யானைவாயில்கொடுத்தகரும்பல்லோமந்திரி
போர்க்குரியதிருச்சிறுப்பள்ளிக்கு அங்கே
போனவர்கள்திரும்பிவரக்காணேனென்மந்திரி
மன்னைகாணுண்டவர்களண்ணே இந்த
மண்ணைநூங்கோடியடா முல்லைமணிமார்பா
என்றைக்குநிட்சயமோ அண்ணே இப்போ
என்மனதுக்கவ்வளவுஞ்சம்மதிகளில்லை
எந்தெந்தத்தேசங்கட்டாலும அவனுக்
கில்லையென்றுமாதிரஞ்சொல்லாதேவேண்டாம்
இந்தமொழிசொன்னீரேசாமி தேவா
இப்படியேசெங்கோல்செலுத்தயோபாரீர்
ஒருகாசுசெலவழிக்காமல் சாமி
உனதுநம்மைநிசைமதினைதுடியாமற்போனால்

தருமகுண முத்துவடுகையா உமக்கொரு
தலையாம்பிரதானியாவனோவென்றார்
என்வார்த்தைகேளாமல்போனால் யுன்னை
என்றைக்குக்காண்பேனோமுல்லைமணிமார்பா
சாமியுடதிருநாமந்தன்னை அடியேன்
தலையின்மேல்வைத்துக்கொண்டார்க்காடுசென்று
திசைகட்டுஒருகட்டாய்கட்டி நானெத்
திருபூவனத்திசையாகப்பாளையக்கைகூட்டி
மறவருடதனகர்த்தனென்று இந்த
வையகமுழுதுமெனச்சொல்லவேணுமென்றான்
ஆர்க்காடுபோகிறபோது நல்ல
டக்காகப்போவென்றார்முத்துவடுகையர்
சிங்கமேசவுரிவல்லையா ஒரு
சேதிநான்வெளாளன்சொல்லுகிறேன்கேளு
உரியரிசிபஞ்சகாலத்தில் கெவுரி
ஒருகோடிஜனத்தையும்ரட்சித்ததாதா
ஒற்றைக்குதிரையேறாதே சாமி
உளைசுற்றுக்காற்றுவழியிஞ்சிகடவாதே
காஞ்சிபாய்வருமட்டுந்துரையே நம்மிட
நாயகன்காளையார்கோயிலிலிருக்க
இவிடத்திலின்னமிருந்தக்கால் நானே
மோசங்கள்வந்துவிடுமுத்துவடுகையர்
சொல்லிவாய்மூடுவதற்குள்ளே அப்போ
துரைமகனுமண்ணன்முகமேறிட்டுப்பார்த்து
அண்ணேவாதாண்டவராயா இப்போ
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
இவிடம்விட்டுஆர்க்காடுபோனால் உன்னை
என்றைக்குக்காண்பேனோதாண்டவராயா
பொன்மிகுத்ததிருச்சிறுப்பளிக்கு நீயும்
போகிறையேஉன்னழகுபார்க்கவேணுமென்று
ஆண்டவன்முத்துவடுகையர் அந்த
நாழியில்காளாஞ்சிகருப்பனையழைத்து
ராயப்பன்சேருவையழைத்து அப்போ
நலங்கொண்டய்யனைதனைக்கொண்டுவரச்சொல்லி
நேயமுடன்சித்திரங்களெழுதி அதிலே
நேராகப்பூச்சக்கிரஅவுதாவும்வைத்து
முத்துநாய்க்கனையுமழைத்து நல்ல
மூடிமன்னன்பொக்கிஷவீட்டைதிறந்து

உக்கிராணவிட்டைத்திறந்து ஒரு
பெட்டியைத்திடீரென்றெடுத்துவரச்சொல்லி
வச்சிரமணிபெட்டியைத்திறந்து அப்போ
வரிசைகள்வெளிதனிலேதிடீலென்றெடுத்துப்
பத்துப்பொன்போருவையெடுத்து நல்ல
பச்சைக்கடுக்கனொருபாகையுங்கொடுத்து
தங்கவளைமுன்கைமுதாரி பசுந்
தங்கமோகனமாலைசரப்பளிகொடுத்து
துங்கமிகத்தகட்டுநிலையங்கி நல்ல
துதிபெறவெள்ளாழனுக்குவெகுமதிகள்செய்து
அழகுதான்பார்க்கவேணுமண்ணே சற்றே
ஆனைமேல்நீயேறிவாவென்றுசொன்னார்
தளகர்த்தன்வெகுமதிகள்வாங்கி வெகு
தளத்துடனேயானைதனைமூன்றுதரஞ்சுற்றி
நேராய்ச்சலாம்வாங்கிநின்று அப்பே
நேரில்நிற்குமுத்துவடுகையனைப்பார்த்து
மெத்தவெகுதுடினஞ்செய்யாதே கம்மிட
மேனாட்டுகள்ளருடனெதிர்த்துப்பகையாதே
பேட்டிகாண்செய்துவருமட்டும் நல்ல
பெருமைசின்னையாநல்லண்ணதேவா
தெற்குதென்பாரிசந்தனிலே நல்ல
திடமாகயானைகட்டுங்கல்லுக்குமேற்கே
நாலுநிகர்மேல்வீடுதன்னில் முத்துச்
சுவர்ணகாமிமகன்கொலுவினிலிருந்தார்
வல்லீரகெம்பீராயாக்கு என்று
மதிமந்திரியானைமேலிருந்துகும்பிட்டான்
ஆண்டவனேமுத்துவடுகையா என்று
அரசர்புகழ்காராளன்கும்பிடும்போது
சனகைப்பெரியுடையானின்ற ராஜ
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன்
உத்தரவுமுல்லைமணிமார்பா இப்போ
உனதழகுகண்ணாலேபார்த்தனடா அண்ணே
செத்தாலுமோட்சமுண்டு அண்ணே என்று
திருஷ்டிசுற்றிப்போய்வாருமென்றுசொன்னாரப்போ
நீரனும்போய்வாவென்றுரைக்க அப்போ
திருப்பினான்யானைதனைத்தாண்டவராயன்
கட்டியர்பராக்கென்றுகூற நல்ல
கணவனாரும்வயிரவன்பட்டியுந்தாண்டி

திருப்பத்தூர்சீமைதேவிதாண்டி வளர்
    சிராவயலுடன்மருதங்குடிகடந்து

சிராவயல்தூப்பமுந்தாண்டி தனது
    திருவளருங்குன்னக்குடிவந்தங்கேசேர்ந்து

ஐம்பதுபொன்னெடுத்துக்கொடுத்து நல்ல
    ஆண்டவன்குமரகுருக்குச்சிறப்புசெய்யச்சொல்லி

மந்தாரைமுல்லையிருவாட்சி நல்ல
    மகிழம்பூகூடமல்லிசாத்தென்றுசொல்லி

வெள்ளிமலர்பொன்மலருஞ்சாற்றி நல்ல
    விதமானவில்வம்லாச்சனையுஞ்செய்து

தாண்டவராயதளமந்த்ரி நல்ல
    தமிரியமாய்க்கும்பிட்டுஏதுசொல்வானும்

வடக்கேதான்போய்வரலாமென்றால் சுவாமி
    வலதுபுறங்கெவுளியதுசொல்லவேணும்சுவாமி

வடக்கேகான்போகலாகாதென்றால் சுவாமி
    வலதுபுறஞ்சொல்லவேணுமென்றான்வேளாளன்

கேட்டுவாய்மூடுவதற்குள்ளே நல்ல
    கெம்பீரமாய்த்தெட்சணமுத்தரவுமாச்சு

சுவாமியினுத்தரவுதன்னை நல்ல
    தளமந்த்ரிதாண்டவன்முந்தானையில்முடிந்து

சந்தோஷமாய்வெளியில்வந்து நல்ல
    தாண்டவராயதடமந்திரிமகிழ்ந்து

வையாபுரிசரைதனிலேறி மண்ட
    லாதிபதிதீவாசுக்கமபளியிலிருந்து

தம்பிதாமோதரம்பிள்ளை இப்போ
    தயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு

வும்பனும்சின்னமறவனோலே உனக்கு
    வருதென்றுசந்தோஷங்கொள்ளாதேஅண்ணே

வானஞ்சிறந்துவரம்பழிந்துபோனால் அந்த
    வாய்க்காலும்நிற்குமோஅல்லிகுலமன்னு

என்சீமையழிந்துபோகையிலே நிலைத்து
    இருக்குமோவன்சீமைராமநாதபுரந்தான்

சிவகங்கைப்பட்டைபோகையிலே நிலைத்து
    நிற்குமோஉன்னுடையராமநாதகோட்டை

மலைக்கோட்டைதுருவமதிலிருந்து நமது
    மதுராபுரிக்கோட்டைக்குவந்தாலேகானன்

மதுரைவளர்கான்சாய்புதுரையே நானும்
    மைத்துனனென்றுசொல்லியொப்பாரிபிடித்து

மாசாலைவத்தங்கையென்றுசொல்லு இப்படி
மரியாதையாம்நானும்யோசித்திருந்தேன்

என்னவுபசாரஞ்செய்தாலும் அவனுக்
கென்னளவும்மனதிலேவிசுவாசமில்லை

உலையானதிருப்பூவணமும் என்னுடைய
கோனபாத்திபனூர்கேழ்க்கிறான்காணன்

தின்றுடையதிருச்சிறுப்பளளி சீமை
யொருமிக்கக்கேழ்க்கிறான்கான்சாய்புநீலன்

ஆற்காடுநபாபையழைத்துவந்து அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபிடிக்கவேணுந்தம்பி

அஞ்சலிலேயாற்காடுசென்று நபாபை
அழைத்துவந்துமதுரைநகர்பிடிக்கவேணுந்தம்பி

இவ்வோலைகண்டநாழிகைக்கு தம்பீ
எழும்பிநீருன்னைக்குடிவாராமலேபோனால்

நபாபைநானழைத்துவரும்போது எல்லோரும்
நகைக்கவேயுஞ்சீமைமுதற்கொள்ளையடிப்பேன்

என்றுசொல்லிகாயிதந்தையெழுதி அப்போ
